# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.132/2019

2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 07 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் பி.சா.2 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 07.03.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சுப்ரமணியன் (DW –2) | வயது | : | 70/2026 |
| க/த பெயர் | : | திரு.ஆறுமுகம் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | 54 நெம்மேலி | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை ;–**

1) சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. பிரதிவாதி தான் என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார் என்றால் சரிதான். பிரதிவாதி என்னுடன் நீதிமன்றம் வந்துள்ளார் என்றால் சரிதான். வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் வாதியானவர் பிரதிவாதிக்கு தாவா சொத்தை விற்கவில்லை என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்.
2) வாதி , பிரதிவாதியை எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலம் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி எனக்கு என்ன உறவுமுறை என்றால் உறவினர் இல்லை, அவரிடம் கூலி வேலை பார்த்து வருகிறேன். கூலி வேலை செய்யும் தினத்தன்று அவர் கொடுக்கும் சம்பளத்தை வாங்கி கொள்வேன் என்றால் சரிதான்.
3) தாவா சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம், நான்கெல்லை தெரியுமா என்றால் சர்வே எண் தெரியாது, விஸ்தீரணம் 2 மா, நான்கெல்லை கீழ்புறம் பத்மாவதி நிலமும், மேல்புறம் செல்வம் நிலமும், தென்புறம் ரோடும், வடபுறம் வாய்க்காலும் உள்ளது. சொத்தின் விபரம், வழக்கின் விபரம் எதுவும் தெரியாமல் பிரதிவாதி கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். பிரதிவாதியிடம் கூலி வேலை பார்த்து வருவதால் அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 18:57:33 +0530

District Munsif

Mannargudi.